# தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு (TETOJAC)
# மாநில உயர்மட்டக்குழு கூட்டம்.

---

தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவின் உயர்மட்ட குழு கூட்டம் 20 .04– 2022 புதன் அன்று மாலை 4.30 மணி அளவில் சென்னை திருவல்லிக்கேணி பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள H H மண்டல் நிதி உதவி நடுநிலைப்பள்ளியில், தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியின் பொதுச் செயலாளர் செ. முத்துசாமி Ex MLC அவர்கள் தலைமையில் கூடியது. டிட்டோஜாக் பேரமைப்பின் 16 அம்சக்கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்ற வலியுறுத்தி அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் கருத்துகளை பதிவு செய்தனர்.அனைவரின் ஒருமித்த கருத்துகளின் அடிப்படையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன

**கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

**தீர்மானம் 1**

மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சர் அவர்கள் 1704.2022 அன்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது டிட்டோஜாக் அமைப்பின் முக்கிய கோரிக்கைகளுள் ஒன்றான அரசாணை 101 மற்றும் 108 விரைவில் ரத்து செய்யப்படுவதற்கானநடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார் இந்த அறிவிப்பிற்கு டிட்டோஜாக் பேரமைப்பு வரவேற்பை தெரிவித்துக் கொள்கிறது. இவ்வறிவிப்பிணை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நடப்பு சட்டப்பேரவைகூட்டத்தொடரிலேயே 110 விதியின் கீழ் அறிவித்தட உதவும்படி மாண்புமிகு பள்ளி கல்வி அமைச்சர் அவர்களை டிட்டோஜாக் பேரமைப்பு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் 2**

தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு ,கடந்த 23.03.2022 அன்று கூடி, தமிழக அரசு 16 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி தீர்மானமியற்றி, மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களை அன்றைய தினமே சந்தித்து சுமார் ஒன்றரை மணி நேரம் ஒவ்வொரு கோரிக்கைகளையும் விளக்கினோம் அதன் அடிப்படையில் நடப்பு சட்டமன்றக் கூட்டத்தொடரில் பள்ளிக்கல்வி மானியக் கோரிக்கையில் நமது கோரிக்கைகள் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும் என்று எதிர்பார்த்தோம். 16 அம்சக்கோரிக்கைகளில் ஒரு கோரிக்கைகூட நிறைவேற்றுவதற்கான அறிவிப்பு வெளியிடப்படாதது ஆசிரியர்கள் மத்தியில்

மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது என்பதை டிட்டோஜேக் ஆழ்ந்த வருத்தத்துடன் பதிவு செய்கிறது.

**தீர்மானம் 3**

மாண்புமிகு. பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களை மீண்டும் டிட்டோஜேக் உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் சந்தித்து நமது கோரிக்கைகள் தொடர்பாக வலியுறுத்துவது எனவும், மாண்புமிகு. தமிழக முதலமைச்சர் அவர்களை டிட்டோஜேக் உயர்மட்டக்குழு சந்தித்து நமது கோரிக்கைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டுமென மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது

**தீர்மானம் 4**

மேலும் 23.04.2022 நாளிட்ட 16 அம்ச தீர்மானங்களில் முந்தைய தீர்மானம் எண் 3இல் "இடைநிலை ஆசிரியர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியம் என்பதை திருத்தம் செய்து, **"இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகள் முற்றிலும் களையப்படும்"** என்ற தேர்தல் வாக்குறுதியினை மாண்புமிகு. தமிழக முதலமைச்சர் விரைந்து நிறைவேற்றக்கோருவது என ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**தீர்மானம் 5**

ஏழு இயக்கங்கள் இணைந்து ஆசிரியர்களின் கோரிக்கைகளுக்காக 1992இல் உருவாக்கப்பட்ட டிட்டோஜேக் பேரமைப்பில் இந்த 7 இயக்கங்களின் பொதுச்செயலாளர்கள் மாநில ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டு வருகின்றனர். தற்போது இப்பேரமைப்பில் புதிதாக இணைய விருப்பம் தெரிவித்து இணைக்கப்பட்டுள்ள சங்கங்களின் பொதுச்செயலாளர்கள் மாநில உயர்மட்டக்குழுவில் இணைத்து செயல்படுவது என தீர்மானிக்கப்பட்டது

**தீர்மானம் 6**

23.03.2022இல் கூடிய டிட்டோஜேக் தமிழக அரசு நிறைவேற்ற வலியுறுத்தி 16 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தது அக்கோரிக்கைகளோடு ஆசிரியர் நியமனம், தகுதித் தேர்வு தொடர்பான கீழ்க்கண்ட கோரிக்கைகளையும் முன்வைப்பது என முடிவாற்றப்பட்டது.

(அ) ஆசிரியர் தகுதித் தேர்வை (TET) ரத்து செய்து ,முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் ஆட்சிக்காலத்தைப்போன்று ஆசிரியர் நியமனங்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக முன்னுரிமை ப்படி செய்திட வேண்டுமெனதமிழக அரசினை கேட்டுக் கொள்கிறது

(ஆ) 16.11.2012 முன்பு ஆசிரியர் தகுதித் தேர்வு தேர்ச்சி பெறாமல் தற்போது பணியில் உள்ள நிதி உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு, அவர்கள் பத்து வருட காலம் ஆசிரியர் பணியை சிறப்பாக செய்துள்ளதைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு தகுதி தேர்வு தேர்ச்சி பெறவேண்டும் என்பதிலிருந்து விலக்களித்து அவர்கள்

தொடர்ந்து பணியாற்ற ஏதுவாக ஆணை பிறப்பிக்க வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சரை டிட்டோஜாக் கூட்டமைப்பு கேட்டுக்கொள்கிறது.

நன்றி

ந.ரங்கராஜன்
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

செ.முத்துசாமி ExMLC
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி

அ,வின்சென்ட் பால்ராஜ்
பொதுச்செயலாளர்
தமிழக ஆசிரியர் கூட்டணி

இலா.தியேடர் ராபின்சன்
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளிஆசிரியர் மன்றம்.

நா.சண்முகநாதன்
பொதுச்செயலாளர்

இரா தாஸ்
பொதுச்செயலாளர்
தமிழகஆரம்பபள்ளி ஆசிரியர் கூட்டணி.

சி சேகர்
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்க நடுநிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம்

.